

TAKE TIME TO TAKE CARE of your SAFETY and HEALTH










# தொழிலாளர்களுக்கான காணொளிப் போட்டி

**விளக்குகள், கேமரா, பாதுகாப்பு என்னிடமிருந்து தொடங்குகிறது!**

அனைத்துத் தொழிலளாளர்களுக்கான அழைப்பு - பாடல், நடனம் அல்லது நடிப்பு ஆகியவற்றில் உங்களுக்கு விருப்பம் இருந்தால், இது உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு. உங்கள் கைப்பேசியைப் பயன்படுத்தி உங்கள் திறமையை காணொளியாகப் பதிவுசெய்து உங்கள் காணொளிகளைத் தொழிலாளர்களுக்கான எங்கள் புதிய காணொளியாகப் போட்டிக்குச் சமர்ப்பிக்கவும். இது அனைத்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்குமானது. இந்தக் காணொளிப் போட்டியானது Workplace Safety and Health Council மற்றும Migrant Workers' Centre, சிங்கப்பூர் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

கருப்பொருள்:

**உயரத்தில் பணிபுரியும் போது உங்களைக் கவனித்துக் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்.**

அன்றாடம் உங்களைப் போன்ற அல்லது உங்கள் நண்பர்களைப் போன்ற தொழிலாளர்கள் உயரத்தில் பணிபுரியும் போது தங்களை ஆபத்துக்குள்ளாகிறார்கள். உங்கள் காணொளி உயரத்தில் வேலை செய்யும் உங்கள் சக ஊழியர்களுக்கு உங்கள் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவிக்கட்டும் அல்லது உயரத்தில் பணிபுரியும் போது பாதுகாப்பாக இருக்க உங்கள் சக ஊழியர்களுக்கு நினைவூட்டலாக இருக்கட்டும் அல்லது உயரத்தில் வேலை செய்த போது ஏற்பட்ட உங்கள் அனுபவம் மற்றும் நீங்கள் சந்தித்தவை அடிப்படையில் ஒரு கதையைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பின்பற்றவேண்டிய எளிய வழிமுறைகள் இங்கே:**

1 உயரத்தில் பணிபுரியும் போது உங்கள் சக ஊழியர்களின் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ள நேரம் ஒதுக்க உங்கள் காணொளி எவ்வாறு நினைவூட்ட முடியும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் காணொளி ஒரு பாடல், நடனம், ராப்இசை, முழக்கஇசை, நடிப்பு அல்லது கதையாக இருக்கலாம்.

2 நீங்கள் ஒரு தனிநபராக அல்லது ஒரு குழுவாக பங்கேற்கலாம்.

3 1 முதல் 3 நிமிடங்கள் வரை கொண்ட ஒரு காணொளியை உங்கள் கைபேசி அல்லது வேறு எந்தக் காணொளிப்பதிவுக் கருவிகளைப் பயன்படுத்திப் பதிவு செய்யுங்கள்.

4 காணொளியை ஆங்கிலத்திலோ உங்கள் சொந்த மொழியிலோ பதிவு செய்யுங்கள். உங்கள் சொந்த மொழி என்பது சீனம், இந்தி, வங்காளம், பர்மீயம், தகலாக் மலாய் மொழியாகவோ இருக்கலாம்,

**$200 மதிப்பு வரை கொண்ட கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்ல ஒரு வாய்ப்பைப் பெறுங்கள்!**

உங்கள் காணொளிகளை உங்கள் நண்பர்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் சக ஊழியர்கள் பார்க்கட்டும் கேட்கட்டும். Workplace Safety and Health Council மற்றும Migrant Workers' Centre - ன் சமூக ஊடக ஒளி வழிகளில் இடம் பெறும் உங்கள் வெற்றிக்கான காணொளியைப் பார்த்தும் மகிழுங்கள்.

**இன்றே உங்கள் போட்டிக்காணொளியை சமர்ப்பிக்கவும்**

1 உங்கள் கைப்பேசியில WhatsApp செயலியில் உள் நுழைந் **+65 8810 9225** என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப்

2 உங்கள் பெயர்இ **NRIC/FIN** (கடைசி 3 இலக்கங்கள் மற்றும் கடைசி எழுத்து. எ.கா. 123A)மற்றும் காணொளியின் தலைப்பு ஆகியவற்றை உள்ளிடுங்கள்.

பின் உங்கள் காணொளியை அதனுடன் இணையுங்கள்.

அனுப்பும் பொத்தானை அழுத்துங்கள்.

3 சமர்ப்பித்தற்கான காலக்கெடு: **5 ஏப்ரல் 2021**
QR குறியீட்டை ஸ்கேன் செய்து, ஈ-போஸ்டரைப் பதிவிறக்கம் செய்து, உங்கள் நண்பர்களுடன் பகிர்நது கொள்ளுங்கள்.



WSHCOUNCIL
Tripartite Alliance for Workplace Safety and Health

MINISTRY OF MANPOWER

SAFETY STARTS WITH ME COMPETITION